பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
03 01 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டியது அவசியம் என மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.
- பள்ளி இடைநிற்றல் இன்றி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக என மாநில அரசு தெரிவித்துள்ளது.
- குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் புதிய நியாயவிலைக் கடைகளை திறக்க நடவடிக்கை எடுக்கமாறு அதிகாரிகளுக்கு மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி அறிவுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.
- ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டியது அவசியம் என மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

மஹாராஷ்டிரா மாநிலம் **Ahilya Nagar-**ல் விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், வோளண் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை உயர்த்தவும் மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் 300 புதிய பயிர் வகைகள் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

உர மானியத்திற்காக அரசு கணிசமான நிதியை ஒதுக்கியுள்ளது என்றும் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

சணல் மற்றும் சணல் சார்ந்த விவசாயத்தை ஊக்குவிக்க மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள சணல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சணல் கொள்முதல் விலையை அரசு உயர்த்தியுள்ளது என்றார்.

14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான சணல் பைகளை கொள்முதல் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளால் சணல் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும் என்றும், அதனால் சணல் தொழில் மேலும் வளர்ச்சி அடையும் என்றும் திரு கிரிராஜ் சிங் கூறினார்.

<<<<>>>>

பள்ளி இடைநிற்றல் இன்றி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதில் தமிழகம் முன்னணி மாநிலமாக திகழ்வதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

நடுநிலைக் கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களின் விகிதம் 2019ஆம் ஆண்டில் 99 சதவீதமாக இருந்ததாகவும், தற்போது 100 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் படிப்பை நிறைவு செய்யும் மாணவர்களின் விகிதம் 2019ஆம் ஆண்டில் 81 புள்ளி 3 சதவீதமாக இருந்தது என்றும், தற்போது 89 புள்ளி 2 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் புதிய நியாயவிலைக் கடைகளை திறக்க நடவடிக்கை எடுக்கமாறு அதிகாரிகளுக்கு மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி அறிவுறுத்தியுள்ளார்.

பொங்கல் பரிசுத்தொகுப்பை பொதுவினியோக அங்காடிகள் மூலம் தடையின்றி வழங்குவது குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அவர், பொருட்களின் இருப்பை கண்காணித்து குறித்த காலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்துப் பொருட்களும் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

பொது விநியோக திட்டப் பொருட்களின் கடத்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இதனிடையே பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான டோக்கன்கள் வினியோகம் இன்றுமுதல் தொடங்குகிறது.

ரேஷன் கடை ஊழியர்கள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு டோக்கன்கள் வீடு வீடாக சென்று விநியோகிகப்படும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையில் இது தெரிய வந்துள்ளதாகக் கூறினார்.

மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் கடந்த இரண்டரை ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளது என்று அவர் குற்றம் சாட்டினார்.

பல குற்றங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கே காவல்துறை மறுப்பதாக அவர் கூறினார்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் தொடர்பாக பிஜேபி தொடர்ந்து குரல் எழுப்பும் என்று அவர் தெரிவித்தார்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகையை மாநில அரசு வழங்க வேண்டும் எனவும் திரு அண்ணாமலை வலியுறுத்தினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதமரின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் காஞ்சிபுரம் கோட்டத்தில் 7 ஆயிரம் பயனாளிகள் இணைந்துள்ளதாக அஞ்சல்கோட்ட கண்காணிப்பாளர் திரு. அருள்தாஸ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இத்திட்டம் தமக்கு பெரிதும் பயனளித்ததாக பயனாளி ஒருவர் கூறினார்.

<<<<>>>>

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு 10 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மின் உற்பத்தியும் தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

இஸ்ரேல் நடத்திய விமான தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் ஹசம் ஷாவான் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

<<<<>>>>

புலம்பெயர் மக்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து, தில்லியில் மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ஆந்திர மாநிலம் ஒய்.எஸ்.ஆர். கடப்பா மாவட்டத்தில் மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

தமிழக முதலமைச்சரின் நீர்நிலைப் பாதுகாவலர்கள் விருதுக்கு இம்மாதம் 17-ம் தேதி வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டம் சின்னாறு நீர்த்தேக்கத்தில் இருந்து, இன்று முதல் 140 நாட்களுக்கு பாசனத்திற்காகத் தண்ணீர் திறக்கப்படும் என நீர்வளத்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி இன்று முதல் 21 நாட்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு இளம் பகவத் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் காடச்சநல்லூர், காக்கராயன்பேட்டை மற்றும் ஆலாம்பாளையம் பகுதிகளில் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி உமா ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வரும் ஊழியர்களும் பொதுமக்களும் பயன் பெறும் வகையில் பிரத்தியேக வாகன நிறுத்திமிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதியில் அச்சுறுத்தி வந்த சிறுத்தைப் புலி, வனத்துறையினரால் கூண்டு வைத்துப் பிடிக்கப்பட்டு, கர்நாடக மாநில எல்லையில் உள்ள அடர்ந்த வன பகுதிக்குள் விடப்பட்டது.

<<<<>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடைபெற்று வரும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன் வரை ---- விக்கெட் இழப்புக்கு ---- ரன் எடுத்துள்ளது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் ஆஸ்திரேலியா 2-1 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மோகன் பஹன் அணி - ஹைதராபாத் அணியை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் மோகன் பஹன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி – முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் உத்தரப் பிரதேச அணி - சூர்மா அணியை வென்றது.

<<<<>>>>